பிடிக்கப்பட்டிருக்கிறார். அவருக்குத் துணையாக திரு. சி. கே. இரவீந்திரன் என்பவர் இருந்ததாகக் கண்டுபிடிக்கப்பட்டு, இப்பொழுது விஜிலன்ஸ் டைரக்டர் அவர்கள் அதுகுறித்து விசாரணை செய்துகொண்டு வருகிறார்கள். இன்னமும் அந்த இயக்குநர் அவர்கள் மேலும் பல சாட்சியங்களைத் தேடிக்கொண்டு புலன் விசாரணை நடத்திக்கொண்டு வருகிறார். யாரும் இதன் மூலமாகக் கைது செய்யப்பட்டிருப்பதாகக் குறிப்பு இல்லை.

திரு. ஆர். கருப்பையா : தலைவர் அவர்களே, இந்த மரவள்ளிக் கிழங்கு சாகுபடித் திட்டத்திலே ஏற்பட்ட ஊழல் காரணமாக ஏற்பட்ட நஷ்டம் எவ்வளவு ரூபாய் என்று திட்டவட்டமாகச் சொல்ல முடியுமா ? அவர்கள் பேரில் தீவிர நடவடிக்கை எடுத்து சரியான தண்டனை கொடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கிட்டத் தட்ட ரூ. 79,300 இப்படி ஒழுங்கீனமாகக் கையாடல் செய்யப் பட்டதாகக் குறிப்பு இருக்கிறது. அதற்கு வேண்டிய சாட்சியங் களைத்தான் தேடிக்கொண்டு இருக்கிறார்கள். விசாரணை நடத்திய தற்குப்பிறகு, அது உறுதியாக்கப்பட்டதற்குப் பிறகு தகுந்த தண்டனை அளிக்கவேண்டும்.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : இந்தக் கேஸ் சம்பந்தமாக எப்.ஐ.ஆர். கோர்ட்டில் தாக்கல் ஆயிற்றா? எப்பொழுது சார்ஜ் ஷீட் செய்யப்படும் என்பதை அமைச்சரவர்கள் அருள்கூர்ந்து கூறுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : விஜிலன்ஸ் அண்டு ஆண்டி-கரப்ஷன் இயக்குநர் அவர்கள் இன்னமும் புலன் விசாரணை செய்துகொண்டிருக்கிறார்கள்.

திரு. ஜே. ஜேம்ஸ் : இந்த வழக்கில், அரமனை பஞ்சாயத்துத் தலைவரும் ஈடுபட்டிருப்பதாக வதந்திகள் வந்துகொண்டிருக் கின்றன. அரசியல் காரணமாக அவர் மீதுள்ள புகார் அதிகமாக விசாரணை செய்யப்படவில்லை என்ற புகார் மக்களிடையே இருக்கிறது. அது அரசுக்குத் தெரியுமா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : புலன் விசாரணை செய்துகொண்டிருக்கிறபடியால் யார் யார் இதிலே சம்பந்தப்பட்டிருக்கிறார்கள் என்பது பிறகுதான் சொல்ல முடியுமே தவிர, யார் யார் என்று இப்பொழுது சொல்லுவதற்கில்லை.

Book binding centre for physically handicaped

* 655 *Q.*—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Education and Health be pleased to state :

(*a*) whether there are proposals under the consideration of the Government to open a book binding centre at Egmore, Madras City for the physically handicapped; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

ஹாஜி ம. மு. பீர் முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, உடல் ஊனமுற்றவர்களுக்காக, 'புக் பைண்டிங்' அல்லது வேறு வகையிலே அவர்கள் தொழிலைக் கற்றுக்கொள்ளக்கூடிய அளவுக்கு அரசு நம்முடைய அச்சகத்தில் ஏதாவதொரு பிரிவை ஏற்படுத்துமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, "உடல் ஊனமுற்றோர்க்காக, சென்னை எழும்பூரில் புத்தகம் தைக்கும் நிலையம் ஒன்றைத் தொடங்குவதற்கான செயற்குறிப்பு ஏதேனும் அரசின் பரிசீலனையில் உள்ளதா?" என்ற கேள்விக்கு 'இல்லை' என்று விடையளித்தேன். ஆனல். 'சொஸைட்டி ஃபார் தி வெல்ஃபேர் ஆஃப் தி ஹாண்டிகேப்டு' என்று சொல்லப்படுகிற ஊனமுற்றவர்களுடைய நல்வாழ்வுக்காக இருக்கும் கழகம் இப்பொழுது ஊனமுடையவர்களுக்குப் பயன்படும் வகையில் ஒரு நிலையம் ஏற்படுத்தும் திட்டத்தை மேற்கொண்டிருக்கிறது. அது திட்ட அளவில் இருக்கிறது; இன்னும் நடைமுறைப்படுத்தப்பட வில்லை. ஆனல், அப்படியொரு நிலையத்தை அமைக்க வேண்டும் என்ற எண்ணம் அந்தக் கழகத்திற்கு இருந்து வருகிறது.

இளநிலை உடற்பயிற்சி ஆசிரியர்கள்

***656 வின—புலவர் பொ. பொன்னம்பலம் :** மாண்புமிகு கல்வி, சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) இளநிலை (Lower Grade) உடற்பயிற்சி ஆசிரியருக்குரிய பயிற்சிப் பிரிவை எடுத்துவிடும் கருத்து அரசுக்கு உண்டா?

(இ) ஆமெனில், எப்பொழுது நடைமுறைக்கு வரும்?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : (அ) இல்லை.

(இ) வினாவிற்கு இடமில்லை.

புலவர் பொ. பொன்னம்பலம் : மதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இளநிலை உடற்பயிற்சி ஆசிரியர்கள், வேலைக்குச் செல்ல முடியாத நிலையும், வேலைக்கு எடுத்துக்கொள்ளப்படாத நிலையும் இருந்து வருகிறது. ஹையர் கிரேடு பயிற்சிபெற்ற ஆசிரியர்களை மட்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளுகிறார்கள். ஒன்று —இளநிலை உடற்பயிற்சியையே எடுத்துவிடவேண்டும்; அல்லது